விலை: சதம் 75

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஐப்பசி 13 ஜுல்ஹஜ் 30 இதழ் 256
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 29 10-1981

வட்டக்கச்சிப் பகுதியில்

# ரூ 2 லட்சம் செலவில் குழாய்க்கிணறு

அமைச்சர் காமினி திறந்துவைப்பார்

[யாழ்ப்பாணம்]

வட்டக்கச்சியில் சுமார் 2லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் குழாய்நீர்க் கிணற்றைக் காணி, காணிஅபிவிருத்தி மகாவலி அபிவிருத்தியமைச்சர் திரு காமினி திசநாயக்கா, அடுத்த மாதம் திறந்துவைத்து, அப்பகுதி மக்களுக்கு கையளிக்கவுள்ளார்.

வரட்சியினால்பாதிக்கப்பட்ட இடங்களில்அமைச்சரின்பணிப்பின் பேரில் குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நீர்வளச்சபைஇக்குழாய்நீர்க் கிணறு அமைக்கும் வேலையை துரிதமாக செய்துவருகிறது.

வட்டக்கச்சி, ஜயந்திநகர், திருவையாறு போன்ற பகுதிகள் வரட்சியினால் பாதிக்கப்பட்டு, குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இம்பகுதிகளில் ஏற்கனவே 3 குழாய்நீர்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன மேலும் 12 கிணறுகள் அமைப்பதற்கான வேலைகள் நடைபெறுவ

[6-ம் பக்கம் பார்க்க]

"மனித உரிமைகள் மீறப்படுகின்றன

# வடபகுதியில்சுமுகமானசூழலை ஏற்படுத்துக!"

## அரசாங்கத்துக்கு யாழ். மாநகரசபை கோரிக்கை

[நமது நிருபர் ஏ. வி. மாணிக்கம்]

பயங்கரவாதிகள் தடைச்சட்டம் போன்ற மனிதஉரிமைகள், சுதந்திரங்களில் மீறுதல்கள் நிகழ அனுமதிக்கும் சட்டங்களை உடனடியாக நீக்குமாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம், நேற்று நடைபெற்ற யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன், யாழ். மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் இப் பிரேரணையைக் கொண்டு வந்திருந்தார்.

"வடபகுதியில் இராணுவத்தினரின் அத்துமீறல்களுக்கு முற்றுப்புள்ளியிடுமாறும் குற்றச் செயல்களைத் தவிர்ப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் பொதுமக்களின் நம்பிக்கையும் பங்களிப்பையும் பெறுவதற்கு சுமுகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்குமாறும் இச்சபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது" என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் போன்ற கடுமையான பல்வேறு நடவடிக்கைகள் குறித்து இச்சபை மிகுந்த திகிலும் கிலேசமும் அடைகிறதென்பதைப் பதிவிலிட அவாவுகின்றது. தமது நாளாந்த கடமைகளில் ஈடுபட்டிருக்கும் பொதுமக்கள் சிறப்பாக இ. போ. ச. மற்றும் மினிபஸ்களில் பயணம் செய்யும் நிரபராதிகளான பொதுமக்கள் கூட பெரும் அசௌகரியங்களுக்கும்; அவமானங்களுக்கும், ஏன் தாக்குதல்களுக்கும் ஆளாக்கப்படும் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது" என்றும் மேற்படி தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. [மா]

## சந்தேகத்துக்கிடமானோர் தொடர்ந்து கைது!

[யாழ்ப்பாணம்]

யாழ், நகரில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய மேலும் பலர் நேற்று பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணம் மார்க்கட்டில்வைத்து 5 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பொதுசனங்கள் நடமாடும் இடங்களில் இராணுவத்தினரும் பொலிசாரும் தாகுதல் நடத்துகிறார்கள் என்று பொய் வதந்திகளைப் பரப்பி, கொள்ளையடிக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதாகப் பொலிசாருக்கு தகவல்கள் கிடைத்ததின் பேரிலேயே கைது செய்யப்பட்டுவருகின்றனர்.

யாழ்நகர வீதிகளில் பொலிசார் அடிக்கடி ரோந்துசுற்றி வருகிறார்கள்.

சந்தேகத்துக்கிடமாக நடமாடுபவர்களின் மீது பொலிசார் கண்காணிக்கத்தொடங்கியுள்ளனர்.

யாழ், நகரில் இடம்பெற்ற சில நிகழ்வுகளை சாட்டாக வைத்துசிலர் விஷமத்தனமான செயல்களைப் புரிவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (மா)

"யாழ் விளையாட்டரங்கிலிருந்து

## இராணுவத்தினரை வேறிடத்துக்கு மாற்றுக"

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர துரையப்பா விளையாட்டரங்கில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரை வேறிடத்துக்கு மாற்றம் செய்யவேண்டும் என்று யாழ். மாநகர சபை அங்கத்தவர் திரு தம்பு கந்தையா மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதனைக் கேட்டுக்கொண்டார்.

இவ்வரங்கில் இராணுவத்தினர் இருப்பதால் எந்தவித மான விளையாட்டுப் போட்டிகளும் நடாத்த முடியாமலிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது சம்பந்தமாக அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு இராணுவத்தினரை வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் உறுதியளித்தார்.

## கல்விஅமைச்சு அதிகாரிகள் இன்று யாழ். விஜயம்

[யாழ்ப்பாணம்]

ஆகஸ்ட் கலவரங்களின்போது தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ்ஆசிரியர்களின் பிரச்சினைகள் குறித்து நேரில் இங்கு ஆராயும் பொருட்டு கல்விஅமைச்சு அதிகாரிகள் இன்று யாழ்ப்பாணம் விஜயம்செய்கின்றனர்.

கல்விஅமைச்சைச் சேர்ந்த திரு. ஜே. டி. காரியவாசம் தலைமையில் மூவர்கொண்ட அதிகாரிகள்குழு யாழ் கல்வித் திணைக்களத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை சந்தித்து விசாரணைகளை மேற்கொள்ளும். [மா]

மாவட்ட அபிவிருத்திசபையின்

## உப அலுவலகங்கள் சிறப்பாகசெயல்பட ஏற்பாடு

[புலோலி]

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உப-அலுவலகங்கள் சிறப்பாக இயங்கி மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க வேண்டுமென்பதைக் கருத்திற்கொண்டு அவைகளைச் சிறப்பாக இயக்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை மேற்கொண்டுள்ளது.

இதற்கிணங்க ஒவ்வொரு அபிவிருத்திச்சபை உப.அலுவலகங்களுக்கும் அபிவிருத்திச்சபை நிர்வாக மேற்பார்வையாளர்களை நியமித்துள்ளது. நியமிக்கப்பட்ட நிர்வாக மேற்பார்வையாளர்கள் ஒரு கிழமைக்கு ஒரு நாளுக்காவது உப-அலுவலகத்தில் முழுநேரமும் இருக்க வேண்டுமெனவும், நிர்வாக மேற்பார்வையாளர்கள் தாங்கள் உப-அலுவலகங்களில் இருக்கும்நாட்களைப் பொதுமக்களுக்கு அறியப்படுத்தவேண்டுமென்றும்நிர்வாகமேற்பார்வையாளர்களை மாவட்டஅபிவிருத்திச் சபை பணித்துள்ளது.

மாவட்ட அபிவிருத்திச்சபை நிர்வாகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை அபிவிருத்தி உப-அலுவலகங்களில் பொதுமக்கள் நடவடிக்கைகளைச் செய்வதற்கு இருந்துவந்த சிரமம் நிர்வாக மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டதனால் நீக்கப்பட்டுள்ளது. இம் மேற்பார்வையாளர்கள் நியமனங்கள் வழங்கப்பட்டதும் ஏற்கனவே மாவட்ட அபிவிருத்திச்சபையால் வழங்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர் பதவிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வைக்கோல், கடதாசிக்கு வரி விதிக்கப்படும்

மட்டக்களப்பு அபிவிருத்திச்சபை தீர்மானம்

[மட்டக்களப்பு]

"மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்படும் வைக்கோலுக்கும் கடதாசிக்கும் வரிவிதித்துமாவட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

"மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வெளியே இருந்து இம்மாவட்டத்திற்கு வரும் பாரவண்டிகளுக்கு வரி விதிக்கப்படவேண்டும்.

"மட்டக்களப்பு ஆரயம்பதி பட்டிருப்பு மகிழடித்தீவு ஆகிய இடங்களில் இரண்டு பொதுச் சந்தைகள் நிறுவப்படும்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசாங்க திணைக்கள கூட்டுத்தாபனங்களில் தொழில் வழங்கிக்கொள்வதிலாக தகுதி அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கவேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைக்கூட்டத்தில்நிறைவேற்றப்பட்டன.

தலைவர் திரு. சி. சம்பந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் அல்பேர்ட் சீவரெத்தினம், கே. மாணிக்கம் மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. பரீத்மீரா லெப்பை ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர்கள் திருவாளர்கள் செ இராசதுரை கே. டபிள்யூ தேவநாயகம் பட்டிருப்பு எம். பி. திரு. பி. கணேசலிங்கம் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. (இ)

## வேலை வாய்ப்புக்களில் முன்னுரிமை

(புலோலி)

"யாழ். பல்தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்று தகுதிப் பத்திரம் பெற்று வேலையின்றி விரக்தியடைந்திருப்போர்களுக்கு வேலைவாய்ப்புக்களில் யாழ். மாவட்ட அபிவிருத்திசபை முன்னுரிமை வழங்கி அவர்களுக்கு விமோசனம் அளிக்கவேண்டும்".

இவ்வாறு கோரும் மகஜரொன்றை யாழ் பல்தொழில் நுட்பக் கல்லூரியின் இந்து மாணவ மன்ற சார்பில் மன்றத்தின் உப- தலைவர் திரு. ஆ. நா. சு. திருச்செல்வம் அபிவிருத்தி சபைத்தலைவருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## கிளிநொச்சி மக்கள் வங்கியில்

# கொள்ளையடிக்கப்பட்ட நகைகளுக்கு நஷ்டஈடுவழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மக்கள் வங்கியில் கொள்ளையடிக்கப்பட்ட நகை உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கான வேலைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு வார காலப் பயிற்சிக்காகக் கொழும்பு சென்றிருந்த மக்கள் வங்கி முகாமையாளர் திரு. வி. கே. ஏரம்பமூர்த்தி தமது பயிற்சியை முடித்துக்கொண்டு நேற்று முதல் தமது வேலையைப் பொறுப்பேற்றுள்ளார். அவரின் பணிப்பின் பேரில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் பெறுமதி, கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் உரிமையாளர்களின் பெயர்ப்பட்டியல் ஆகியன தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கணக்கெடுப்பு வேலைகள் முடிவடைந்த பின்னர் மேலிடத்திற்கு அறிவிக்கப்பட்டு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்த பின் உரியவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவுள்ளது. (செ)

## கிளிநொச்சி

# மக்கள் வங்கியில்

## வழமை வேலை ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மக்கள் வங்கி வழமைபோல் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை வழமைபோல் வாடிக்கையாளர்கள் வங்கிக்குச் சென்று கொடுப்பனவு, கொள்வனவு வேலைகளை ஆரம்பித்தனர்.

வங்கியில் பாதுகாப்புக்காக நகைகளை வைத்தவர்கள், நகைகளை அடைவு வைத்தவர்கள் ஆகியோர் மக்கள் வங்கியை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர்.

இம்மாதம் 6ந் திகதிக்குப் பின்னர் அடைவு வைக்கப்பட்ட நகைகள் கொள்ளையர்களால் உடைக்கப்படாது விடப்பட்ட இரும்புப் பெட்டியில் பாதுகாப்பாக இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒரு கோடி ஏழு லட்சம் ரூபாவுக்கு அடைவு வைக்கப்பட்ட நகைகளே கொள்ளையடிக்கப்பட்டதென்றும், கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் பெறுமதியைக் கணக்கெடுக்கும் வேலைகள் துரிதமாக நடைபெறுவதாகவும் அறியப்படுகிறது. (செ)

## வழமையான நிலைக்கு கிளிநொச்சி திரும்பியது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வழமையான நிலைக்குத் திரும்புகிறது.

கிளிநொச்சியில் உள்ள கடைகள் நேற்றுக் காலை முதல் மாலைவரை திறந்துவைக்கப்பட்டிருந்தன. மக்கள் நடமாட்டமும் கடந்த சில நாட்களைவிடக் கூடுதலாகக் காணப்பட்டது.

தீபாவளித் தினத்தன்று காலை கடைகள், சந்தையாவும் திறந்துவைக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சிலர் கடைகளைப் பூட்டுமாறு கூறிப் பயமுறுத்திச் சென்றதையடுத்து அன்றைய தினம் கடைகள் யாவும் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தையும் உடனடியாகக் கலைந்துவிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

நேற்று முதல் கடைகள் மீண்டும் திறந்துவைக்கப்பட்டுள்ளன. படக் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. மக்கள் பயமின்றி நடமாடத் தொடங்கியுள்ளனர். (செ)


உ

குமரயம்

யாழ்ப்பாணம், திருவண்ணைநகர்

அருள்மிகு

## செந்தில் கதிர்வேலாயுதசுவாமி திருக்கோயில்

(ஸ்ரீ கதிரேசன் கோயில்)

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் மேற்படி திருக்கோயிலை நிர்வகிப்பதற்கு ஓர் அறங்காவலர் குழுவை நியமித்துள்ளது. அக்குழுவிடம் மேற்படி திருக்கோவிலுக்குச் சொந்தமான சோனகன் தறை என்னும் காணியில் யாழ்ப்பாணம் (பொன்னுரு வீதி) மணிப்பாய் வீதி 116, 118, 118/1, 118/2, 118/3, 120, 120/1, 120/2, 126, 125/1, 128, 13, 136-ஆம் இலக்கங்களிலும் காங்கேசன்துறை வீதி, 371, 371/1, இலக்கங்களிலும் உள்ள கடைகளும், வீடுகளும், நிலங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆகவே மேற்படி இலக்கங்களைக் கொண்ட ஆதனங்களில் இப்பொழுது வாடகைக்கு, அல்லது குத்தகைக்கு, அல்லது அனுமதி பெற்று இருப்போர் வேறு ஒருவருக்கு அறங்காவலர் குழுவின் அனுமதி இன்றி கீழ்க் குத்தகை, வாடகை, பங்கு வியாபாரம், கூட்டுக் குடித்தனம் ஆகிய எவ்வகையிலேனும் பராதீனப்படுத்தவோ, பாதிக்கப்படுத்தவோ, கூடாது என அறியத்தருகின்றோம்.

எவரேனும் இவ்வறிவித்தலை மீறினால் தாம் கொடுக்கும் பணத்தை இழப்பதோடு, நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு நஷ்டஈடும் செலுத்தவேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

அறங்காவலர்குழு ஆணைப்படி

சி. செ. சோமசுந்தரம்

செயலாளர்.

217, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம் 24-10-81. 1310


# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 13-ம் திகதி வியாழக்கிழமை

(29-10-81)

**மேடம்-** அரசினரின் ஆதரவுப் பார்வை உங்கள் பக்கம் திரும்பும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முனைவர். அமைதியே நன்று.

**இடபம்-** இனத்தவரின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**மிதுனம்-** குறை கேட்க நேரிடும். கடமையில் தடைகள் தோன்றும். நஷ்டத்திற்கு இடமுண்டு. நாளைக்கம் நன்று. சுபதினம்.

**கடகம்-** உண்மைவழி நின்று உயர்வடைவீர்கள். மேலதிகாரிகளின் நம்பிக்கை உங்கள்மீது பதியும். அதிர்ஷ்ட வாய்ப்புகளும் உண்டு.

**சிம்மம்-** நலகாலம் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வுக்கு வழி கோலப்படும். இளைஞர்க்கு புதிதாகத் தொழில் கிடைக்கும். வருவாயும் வளரும்.

**கன்னி-** புதிய தொழிலின் மூலம் இலாபம் கிடைக்கும். புத்திரர்களுடைய செல்வாக்கும், புதுமையான எண்ணங்கள் மனதில் பதியும்.

**துலாம்-** பணத்தை அள்ளி வீசினாலும் பலன் மட்டமாகத்தான் இருக்கும். சக தொழிலாளர்களுடன் மோதல்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

**விருச்சிகம்-** தொழில் புரியும் இடத்தில் கருத்துவேற்றுமைகள் தோன்றக்கூடும். கொடுக்கல் வாங்கல்மூலம் எதிரிகளைத் தேடிக்கொள்வீர்கள்.

**தனு-** சமயோசிதமான நடவடிக்கைகள்மூலம் எதையும் சமாளித்துக்கொள்வீர்கள். இல்லறத்தில் அமைதி நிலவும். இன்று நல்ல பலனை அளிக்கும்.

**மகரம்-** மனைவியின் பூசல்கள் தோன்றி மறையும். தனிமையை விரும்புவீர்கள். தொழில் புரியும் இடத்தில் கண்துடைப்பு வேலை நடைபெறும்.

**கும்பம்-** அறவழிகளை மனம் நாடும். பொது விவகாரங்களில் ஈடுபடுவதன் மூலம் பொருட் செலவுக்கு இடமுண்டு. அனுகூலம் தென்படலாம்.

**மீனம்-** உல்லாசமாகப் பொழுதைப் போக்குவீர்கள். இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள். பொருள் வரவுக்கும் இடமுண்டு.

சோதிட கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## தமிழ் தெரிந்தவர் வேண்டும்

(மன்னார்)

சிலாவத்துறைப்பகுதி மீனவர்களின் நலன் கருதி தமிழ் தெரிந்த மீன்பிடி பரிசோதகர் ஒருவரை சிலாவத்துறைப்பகுதிக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றினை அரிப்பு கடற்றொழில் விரிவாக்க சேவை சங்கம் மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு. பி. எம். சேபமாலைக்கு அனுப்பி வைத்துள்ளது.


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் கலட்டி பிறவுண் வீதி, மதவடி ஒழுங்கை 93/5ஐச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதி வேலு என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

நடேசு குணேஸ்வரன் இல. 93/5 மதவடி ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 3582

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்

பதிவாளர்.

1981ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 1314

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற சரவணமுத்து அப்பையா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

அப்பைய மாதேவன் கோண்டாவில்.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3630

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி

தா. குலஞானம்,

பதிவாளர்,

1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7-ந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

1313

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பிலிப்ஸ் T. V. 27" கலர் நாஷனல் வீடியோ டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. த. சந்திரன், 545, பருத்தித்துறை வீதி, நல்லூர். (1318)

பச்சிலைப்பள்ளி

ப. நோ. கூ. சங்கம்

பளை

## கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்க்காணும் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு

வெற்றுச்சாக்கு-5000 வரை

பாவித்த லொறிரயர், ரியூப்புக்கள்.

கழிவு மா, சீனி

வெற்றுச்சாக்குக்கான கேள்வி விண்ணப்பப் படிவத்தை ரூபா 100/- மீளப் பெறும் வைப்பாக செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்த வேண்டியதில்லை. விண்ணப்பங்கள் யாவும் 6-11-81க்கு முன் சீல் இடப்பட்ட பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம் அல்லது ரயர் ரியூப்பும் கேள்வி விண்ணப்பம் அல்லது கழிவு மா, சீனி கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிடவும்.

இங்ஙனம்

பொதுமுகாமையாளர்

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்,

பளை.

24-10-81. 1311


## கடையில் திருட முயன்றாராம்

### இளைஞருக்கு ரிமாண்ட்

(மாவிட்டபுரம்)

கடையை உடைத்து கை வரிசை காட்ட முயன்ற இளைஞரொருவர் பொதுமக்களிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

காங்கேசன்துறை சந்திக் கண்மையிலுள்ள கடையொன்றை இரவு நேரம் உடைத்து அங்கிருந்த பொருட்களை திருட முயற்சித்த இளைஞரொருவர் கடையை உடைக்கும்போது அயலவர்கள் சத்தம் போட்டு எழுந்துவிடவே செய்வதறியாது விழித்தார். பொதுமக்கள் இவரைப் பிடித்து காங்கேசன்துறைப் பொலிஸில் ஒப்படைத்தனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சிவநேசன் என்னும் இவ்விளைஞன் நவம்பர் 2-ந் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## கரீபியன்தீவு விஜயம்

(கொழும்பு)

பொலன்னறுவ மாவட்ட அமைச்சர் திரு. மெரில் டி. சில்வாவும் பாரியாரும், பிரதமர் திரு ஆர். பிரேமதாசா தம்பதிகளின் பிரதிநிதிகளாக கரீபியன் தீவான அன்ரிகுவா சுதந்திரக்கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளார்.

நவம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுமாறு பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர் தனது சார்பில் திரு. மெரில் டி. சில்வாவையே அனுப்பிவைக்கின்றார்.

## மணிவாக்கு

உலகத்தின் நடவடிக்கை யெல்லாம் ஈசுவர ஆஞ்ஞையோ, அல்லோ? —ஆன்மவிசாரம்

# நமது நோக்கு

## மன்னனும் மக்களும்

எங்கள் பத்திரிகையில் "வால்" எழுதிய "சுதந்திர இலங்கையில் இரண்டாவது ராஜ பவனி" என்ற கட்டுரை பண்டைக்கால மன்னர் ஆட்சியை நினைவுக்கு கொண்டுவரும்

"மழையையும் வெயிலையும் மாத்திரமல்ல, பொலிஸாரின் பலத்த பந்தோபஸ்து நடவடிக்கைகளையும்" மக்கள் பொருட்படுத்தாத அளவிற்கு ஜனவெள்ளம் ஆரவாரித்தது எவ்விதத்திலும் வியப்பல்ல.

1954ம் ஆண்டு விஜயஞ் செய்த மகாராணியை எங்கள் நாட்டின் முடியாட்சியின் கடைசி மன்னராகக் கொண்டு, பண்டைக்கால இலங்கை மன்னர்களை நினைவுகூர சந்தர்ப்பம் அளித்தது. ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள் பலர் இந்த விஜயத்தின் மகத்துவத்தை மக்களுக்கு முன் கூட்டியே விளக்கி வைத்தனர்.

ஏறத்தாழ ஒன்றரை வருடமாக ஒழுங்கு பண்ணப்பட்ட இவ்வைபவத்தில் பந்தோபஸ்து காரணமாக மகாராணி பிரசன்னமாகவிருக்க முடியாத நிலை எழுமோ என்ற அச்சம் அவரின் வருகைக்கு மிகுந்த ஆர்வம் ஊட்டிய தெனிவு.

அரசனைத் தெய்வத்தின் பிரதிநிதியென்றும் முறை தவறாது அரசியல் நடத்தி மக்களைக் காப்பாற்றும் மன்னன் தெய்வத்தோடு ஒப்பவைத்தெண்ணப்படுவானென்றும் எங்கள் நாட்டு இலக்கியங்கள் கூறுகின்றன.

இரண்டாயிரம் வருடத்துக்கு முன்வாழ்ந்த தமிழ் மக்களின் மனப்போக்கைக் கொண்டு மன்னனுக்கு இலக்கணம் வகுத்த தமிழ் முனிவர் நல்லரசின் குணங்களைத் தெளிவுபடுத்துகின்றார்,

மனத்திண்மையும் அறிவும் ஊக்கமும் அரசனுக்கு இன்றியமையாதது. இன்சொல் சொல்லும் இயல்புடையனாய், செருக்கும் சிறுமையும் இல்லாது, குற்றமும் அநீதியும் தன்னைச் சாராது அரசியல் நடத்தும் பொறுப்புடையவன் நல்லரசன்.

நடுநிலையில் நின்று ஆராய்ந்து குற்றத்திற்குரிய தண்டனை விதிக்கும் வேந்தனே! அரசநீதியைச் செய்வதில்லையென்றும் அரசனை முழுமுதற்பொருளோடு ஒப்பவைத்தெண்ணுவதும் தமிழ் மக்கள் வழக்கம்.

இந்நாட்டில் வாழும் பல, இன, மத, மக்கள் அனைவரும் இத்தகைய குணங்களையே பண்டைக்கால அரசர்களின் செங்கோலாட்சியில் கண்டதாகக் கொள்கின்றனர்

சிறப்பாகக் கீழைத்தேசத்து மக்கள் உலகம் காக்கின்ற வேந்தரிடத்து ஒளி உண்டென்று, அவ்வொளியே உலகினைக் காக்கும் பெரும் இறையாமென்றும், அவ்வொளியே அவருடைய தெய்வத்தன்மையை உணர்த்துமென்றும் நம்பி வந்தனர்.

இன்று முடிகள் உருண்டோடியபோதும், ஒரு மன்னனைக் கண்டால் இந்த நினைவுகள் திரும்பி வருவது இயற்கை.

பலநாடுகளில் இன்று குடியாட்சி ஓங்கும்போது, ஜனநாயக ஆட்சியை வகுத்த பிரிட்டன் பரம்பரை மன்னனையே தலைவராகப் பேணி வருவது ஒரு சிறந்த வழக்கம்.

இதன் விளைவாக எங்கள் நாடு குடியரசானதும் மக்களுக்கு மன்னரைக் காண்பிக்க எங்கள் முன்னைநாள் மகாராணியையே வரவழைத்தது மிகப்பொருத்தமென்று நாம் முன்னரே குறிப்பிட்டிருந்தோம்.

எங்கள் நாட்டுக்கு இன்றும் பேருதவி வழங்கும் பிரிட்டனின் மகாராணிக்கு மக்களைப் பார்க்கவும் மக்கள் அவரைப் பார்க்கவும் அதற்கு மேலாக பிரிட்டிஷ் உதவியுடன் துரிதமாக நடைபெறும் விக்டோரியா அணைத்திட்டம் செயற்படும் விதத்தை நேரில் காணவும் வாய்ப்பளித்தது விவேகமான செயல்.

இருப்பினும் சுதந்திர இலங்கையில் இரண்டாவது ராஜபவனி இரண்டு வழிகளில் குறைவடைந்ததையும் நாம் குறிப்பிடுவது அவசியமாகும்.

நாட்டின் ஒற்றுமை வாழ்வு பல வழிகளிலும் சின்னாபின்னப் பட்டிருந்த வேளையில் அரசதம்பதிகள் நாட்டின் பிரதமவிருந்தினராக வருகை தந்தது முதலாவது முக்கிய குறையாகும்; நாட்டின் பல்வேறு இடங்களில் வாழும் ஏழை மக்களை, சாதாரண பிரஜைகளை, ஜனநாயகத்தின் அடித்தளத்தை அவர்கள் காண ஆசைப்பட்ட போதும் அது முடியாத காரியமாய்விட்டது.

இதன் பிரதிபலிப்பே அரசவிஜயத்தின் மகிமையையும் சுதந்திர நாட்டின் முதன்மையையும் பாதிக்கும் மற்றைய அம்சம். அது என்ன?

பத்திரிகைகளையும் வானொலியையும், பல்வேறுபட்ட அசாதாரண ஆரவாரங்களையும் கணித்தால் நாம் ஒரு சுதந்திர நாடென்று நம்புவது கடினமாகின்றது.

எவ்வித பெருமைபெற்ற பேர் அதிதிகள் வந்தாலும் மக்களின் அளவு கடந்த ஆரவாரிப்பு அவர்களையே அந்தரப்படுத்தும் செயலாகும். இதற்கு ஆங்கிலத்தில் Flunkeyism என்றொரு அழகான சொல் உண்டு.

## புலவர் மணியின் நினைவு விழா

[மட்டக்களப்பு]

புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையின் நினைவு விழா நவம்பர் மாதம் இரண்டாந் திகதி மட்டக்களப்பு வின்சென்ற் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. அ. கி. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் ஜனாப். எம். ஏ. மஜீத் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இவ்விழாவில் திரு. எஸ். இராஜி. செல்வி எஸ். தாமோதரம்பிள்ளை, திருமதி. பாக்கியராசா, வித்துவான் சா. இ. கமலநாதன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர் இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது. [இ-செ]

# அறுபடை வீடுடையன் அவன்பதம் பணிவோம்



மூவிருமுகங்கள் போற்றி என்னும் கடவுள்வாழ்த்துடன் கந்தபுராணத்தைக் கச்சியப்ப சிவாசாரியர் ஆரம்பிக்கின்றார். அவருக்கு ஆயிரத்து இரு நூற்றாண்டுகளுக்கு முன்னரே சங்கப்புலவர்கள் பரிபாடல், அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, புறநானூறு முதலிய எட்டுத்தொகை நூல்களில் முருகனைப் போற்றியுள்ளார்கள். சங்கப்புலவர்களுள் முன்னணியில் இருந்த நக்கீரர் முருகனைத் துதித்து முருகாற்றுப்படை பாடியுள்ளார் சங்கப்புலவர்களுக்கு முந்தியவராய தொல்காப்பியர் முருகக் கடவுளைச் சேயோன் எனப் பெரிட்டு அவர் மலைகள் உள்ள குறிஞ்சி நிலத்துத் தெய்வம் எனக் கூறினார். "சேயோன் மேயமைவரை உலகம்" என்பது அவர்கூற்று. அதனை விளக்கிய நச்சினார்க்கினியர், "செங்கேழ் முருகன் காதலித்தவான் தங்கியமைவரை உலகம்" என்றார். முருகப் பெருமானுக்கு தமிழ்நாட்டில் திருக்கோயில்கள் இருந்ததை குறித்து இளங்கோவடிகள் 'அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்' எனக் குறிப்பிடுவர்.

றும் "போர்மலிந்து சூர்மருங்கறுத்த கடர்ப்படை வேலோய்" என்றும் இவை போன்றும் கூறுவன. முருகப் பெருமானிடம் பக்தர்கள் பல விதமாக வரங்கேட்டிருக்கின்றனர். "நன்றமர் ஆயமோடு ஒருங்கு நின் அடியுறை இன்று போல் இயைகெனப் பரவுதும் ஒன்றார்த் தேய்த்த செல்வ

வைதாரையும் வாழவைப்பவன் என்று அவன் தமிழ்ப் பற்றைப் பிற்காலப் புலவர் நயந்து கூறுவர். முருகன் தன்னை அடியார்கள் வாழ்த்துவதை உவப்பதைப் போல வாழ்த்துவப்பான் என்று நப் பண்ணனார் பாடியுள்ளார். ஈரநெஞ்சும் ஒழுக்கமும் உள்ள அந்தணரே முருகனுக்கு அர்ச்சிக்க அதிகார முள்ளவராவர்.

### க. சி. குலரத்தினம்

கண்கண்ட தெய்வம் என்றும், தண்டமிழ்த் தெய்வம் என்றும், கலியுகத் தெய்வம் என்றும் வழங்கும் முருகப் பெருமானுக்குத் திருநாமங்கள் மிகப்பலவாகும். முருகன், கந்தன், கடம்பன், செய்யோன், சேயோன், செவ்வேள், நெடுவேள், விறல்வேள், வேள்வேள், குகன், குமரன், வேலன் முதலியனவாய திருநாமங்கள் ஒருபுறம்; இன்னும் ஆறுமுகன், சண்முகன், சரவணபவன், கார்த்திகேயன், காங்கேயன், சுப்பிரமணியன், சுவாமிநாதன், சூரசங்காரன், பழநிநாதன், மயில்வாகனன், தேவசேனாபதி, வள்ளிமணாளன், விசாகன் முதலாய திருநாமங்கள் ஒருபுறம். இன்னும் எத்தனை எத்தனை திருநாமங்கள் முருகனை ஏத்தித் துதிக்கின்றன.

சங்கப்புலவர்கள் பாடிய பாடல்களுள் பரிபாடலில் முப்பது பாடல்கள் முருகன் மேற்பாடப்பெற்றன. அவற்றுள் நமக்குக்கிடைப்பன எட்டுப்பாடல்கள். பரிபாடலில் முருகனைப் பெரும் பெயர் முருகன் எனப் போற்றுவர். சங்கப்புலவர்களின் இருக்கைக்கு அண்மையில் இருந்த திருப்பரங்குன்றத்தையும் முருகனையும் புலவர்கள் வெகுவாகப் போற்றுவர். திருப்பரங்குன்றத்தில் தேவாதி தேவரெல்லாம் கூடிநின்று முருகப்பெருமானைச் சேவித்தலில் அது கயிலை போன்றது என்பர். சங்கப்புலவர்கள் வாழ்ந்த மதுரைநகர் வாசிகள் திருப்பரங்குன்றத்துச் சேயைப் போற்றுந்திறனைக் கூறுவர். சந்தனம், மலர், நறும்புகை, நந்தாவிளக்கு, முழவு, மணி முதலியனவற்றைப் பக்தர்கள் திருக்கோயிலுக்கு எடுத்துச் சென்றனர் என்பர். தாளம் தவறாமற் பாக்கள் பாடிக்கூத்தும் ஆடினர் என்பர்.

பரிபாடலிற் சில பாடல்கள் கந்தபுராணக்கதையை முதலிற் கூறுகின்றன. "கடுஞ்சூர் மாமுதல் தடிந்தறுத்த வேல் அடும் போராள" என்

நிற்றெழுதே" என்பார். ஒரு புலவர்.

### மலையக மக்கள் வழிபடு மரபு

முருகனைப் பரவும் மலையக மக்கள் காந்தள், கடம்பு, வெட்சி முதலிய மலர்கள் தூவித் தேனும் தினைமாவும் படைத்து வழிபட்டனர். முருகனின் மூவிருமுகமும் பன்னிரு தோளும் கண்டு மகிழ்ந்த புலவர் முந்நான்கு தோற்கவிற் கண்ட படைக் கலங்களையும் குறிப்பிடுவர். முருகன் செந்நிற ஆடையும் கடப்பமாலையும் அணிந்தவன் என்பர். உருளிணர்க் கடம்பின் ஒலி தாரோயே" என வாழ்த்துவர். வள்ளியம்மையாரோடு முருகன் கொண்ட காதலையும் அன்பையும் புலவர்கள் பாடுவர். வள்ளியை வள்ளிப்பூ என்றும் மான்மறி என்றும் பாடுவர். "நறுமலர் வள்ளிப் பூ நயந்தோயே" என்பது புலவர் பொன்மொழி.

முருகனைப்பாடிய நல்லழிசியார் என்பார் தாமும் தம் சுற்றமும் பிறவித்துன்பம் நீங்கிப் பேரின்பம் பெறவேண்டும் என்பர். கடுவன் இளவெயினனார் என்பார் முருகனை அன்பு காரணமாக விளித்து "யாம் "யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்" என்பர். இவ்வாறெல்லாம் புலவர்கள் எண்மர் பாடிய 612 அடிகளைக் கொண்ட பரிபாடல் முருகனைப் போற்றுகின்றன. ஏழுலகத்தையும் ஆட்சி புரிபவன் முருகன் என்றும் அவனைத் தரிசித்தற்குத் தேவர்களேயன்றி அசுரர்களும் முனிவர்களும் மக்களும் நெருங்கி நிற்பர். அவனுக்குப் பூசையாகும் போது நறும்புகை தூபமிடுவர், மணியடிப்பர். அவன் ஊர்தியாய யானைக்கு உணவூட்டுவர். யார் யார் முருகப் பெருமானின் திருவடியின்பம் பெற மாட்டார்கள் என்று திட்டவட்டமாகப் புலவர் பாடுவர். "உள்ளத்தில் சீற்றம் மிக்கவர், அறஞ் செய்து புகழ் பெறாதவர், கூடா ஒழுக்கத்தால் தவங்குலைந்தவர், மறுபிறப்பு என்று ஒன்று இல்லை என்போர் முருகனின் திருவடியைச் சேரமுடியாது என்பர்.

முருகன் முத்தமிழால்

### ஆறுபடைவீடுகள்

முருகனையும் திருப்பரங்குன்றத்தையும் முறையாகப் பாடிய பெரும்புலவர் நக்கீரர். அவர் பாடிய திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டு என்னும் சங்க இலக்கியத் தொகுதியில் முதற் பாட்டாகவும், பன்னிரு திருமுறைத் தொகுப்பில் பதினொராந் திருமுறையில் நடுநாயகமாகவும் அமைந்த பெருமையுள்ளது. (அதனை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் 1851 ஆம் ஆண்டில் நன்முறையில் உரையோடு பதித்துப் பரப்பியுள்ளார்.)

மூவிருமுகத்து முருகப்பெருமானுக்குத் திருப்பரங்குன்றம் திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய படைவீடுகள் விருப்பமானவை என்று திருமுருகாற்றுப்படை கூறும். இதனை ஆறு திருப்பதியில் வளர் பெருமாளே என்று அருணகிரிநாதர் திருப்புகழிற் பாடியுள்ளார். "உள்ளம் உவந்து ஆறு திருப்பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன் கூறும்வர் சிந்தை குடிகொண்டோனே" என்று குமரகுருபர சுவாமிகள் கந்தர் கலிவெண்பாவிற் பாடுவர்.

இறைவன் திருவடியின்பம் பெறுவதையே ஆன்மாவின் தலையாய பேரின்பம் என்பர். அதனைப் பெறவரும்பரிசில் என்று நக்கீரர் நயம்படப் பாடுவர், நயப்பர்.

முருகப்பெருமானை உபாசிப்பவர் அவனை வழிபடுவதற்குரிய இடங்களை நக்கீரர் பாடுவர். காடு, சோலை, ஆற்றிடைக்குறை, ஆறு, குளம், சந்தி, கடம்பமரத்தடி, அம்பலம், நடுகல் முதலிய இடங்களில் முருகனைக் காணலாம் என்பர்.

## யாருடைய சைக்கிள்?

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பண்ணைவீதியில் வன்செயல்களின் போது தவற விடப்பட்ட சைக்கிள் ஒன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதியிலுள்ள சேகரம் அன்சன்ஸில் உள்ளது.

சைக்கிளின் சொந்தக்காரர் தகுந்த அத்தாட்சிகளுடன் வருவதால் சைக்கிளை மீட்டுக் கொள்ளலாமென அவ்வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

# ஐ. நா. பொதுச் செயலாளர் தெரிவு முயற்சி தோல்வி

## 'வீட்டோ'வின் விளைவு

நியூயோர்க், அக். 28

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய பொதுச் செயலாளரைத் தெரிவு செய்யும் முயற்சியில் ஈடுபட்ட ஐ. நா. பாதுகாப்புச் சபை இதில் தோல்வி கண்டது என அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகள் சில தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியதை அடுத்தே பாதுகாப்புச்சபையின் முயற்சி தோல்வியடைந்தது.

எந்த நாடுகள் "வீட்டோ" செய்தன என்பது பற்றிய விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஐ. நா. பொதுச்செயலாளர் பதவிக்கு முன்னாள் பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம், தன்சானிய வெளியுறவு அமைச்சர் ஜனாப் சலீம் அமட் சலீம் ஆகிய இருவரும் இத்தேர்தலில் போட்டியிட்டனர்.

டாக்டர் வால்ட்ஹெய்முக்கு எதிராக சீனாவும், ஜனாப் சலீமுக்கு எதிராக அமெரிக்காவும் தமது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. [இ]

# சோவியத் மத்தியகிழக்கில் இராணுவத்தளம் அமைக்காது

## அதிபர் பிரஷ்னேவ் கூறுகிறார்

மொஸ்கோ, அக். 28

மேற்காசியாவில் இராணுவத் தளம் அமைக்கும் நோக்கம் சோவியத் யூனியனுக்குக் கிடையாது. மேற்காசியாவில் சமாதானத்தை நிலைநாட்ட சகலருடனும் ஒத்துழைக்க சோவியத் யூனியன் என்றுமே தயாராக இருக்கிறது.

இவ்வாறு சோவியத் அதிபர் திரு. லியோனிட் பிரஷ்னேவ் மாஸ்கோவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

பாலஸ்தீன மக்களின் விவகாரம் குறித்த பேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேல் முன்வர வேண்டும்.

அமெரிக்காவின் ஆதரவுடன் இஸ்ரேல் மத்திய கிழக்கில் ஊடுருவல் செய்து வருவதனாலேயே மத்திய கிழக்கில் பதற்ற நிலை இருந்துவருகிறது. [இ]

## சர்ச்சைக்குரிய இங்கிலாந்தின் இந்திய

# கிரிக்கட் சுற்றுப்பயணம் பிரதமர் தட்சர் கருத்து

லண்டன், அக். 28

இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடித்து வரும் தென் ஆபிரிக்காவுடன் தொடர்பு கொண்டுள்ள காரணத்தால் ஐக்கிய நாடுகள் சபையினால் தயாரிக்கப்பட்ட கறுப்பு பெயர்ப் பட்டியலை பிரிட்டிஷ் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் லண்டன் வந்திருந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் இங்கிலாந்து கிரிக்கட் கோஷ்டியின் இந்திய சுற்றுப் பயணம் பற்றித் தாம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றும்-

கிரிக்கட் விளையாட்டின் மேம்பாட்டுக்காக இந்திய - இங்கிலாந்து கிரிக்கட் டெஸ்ட் ஆட்டங்கள் நடக்கவேண்டும் எனத் தாம் விரும்புவதாகவும் திருமதி தட்சர் கூறினார்.

தென் ஆபிரிக்காவுடன் தொடர்பு கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கட் கோஷ்டியைச் சேர்ந்த ஜியோவ்போய்கொட், ஜியோவ் குக் ஆகிய இருவரும் கோஷ்டியிலிருந்து வெளியேற்றப்பட்டால் மட்டுமே இங்கிலாந்துக் கோஷ்டி இந்தியாவுக்கு விஜயம் செய்வதை அனுமதிக்க முடியும் என்று இந்தியஅரசு தெரிவித்ததனால் இக்கோஷ்டியின் சுற்றுப் பயணம் இன்னமும் சந்தேகத்திற்கிடமாகவே இருந்து வருகிறது. [இ]

## சதாத் கொலை

# 4 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

கெய்ரோ, அக். 28

எகிப்திய முன்னாள் அதிபர் ஜனாப் அன்வர் சதாத்தைக் கொலைசெய்த குற்றச்சாட்டின் பேரில் 4 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பூர்வாங்க விசாரணைகள் முடிவடைந்துவிட்டன என்றும் 4 பேர் மட்டுமே இக்கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டனர் என்றும் எகிப்திய பொலிசார் தெரிவித்தனர்.

இவர்கள் 4 பேரும் ஜனாப் சதாத் கொலைசெய்யப்பட்ட 3 தினங்களில் கைதுசெய்யப்பட்டவர்களாவர். [இ]

## தலைவர் பதவி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர் பதவியை மீண்டும் கூட்டணி கைப்பற்றியது. இச்சங்கத்தின் புதிய தலைவராக த. வி. கூட்டணி உறுப்பினர் திரு. தி. சதாசிவம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# கூட்டணி பொதுச்சபை நவ.1-ல் கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபை நவம்பர் 1ந் திகதி கூடவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு சம்பந்தமாக ஆலோசிக்கப்படுமெனத் தெரிகிறது.

யாழ் மாவட்டத்தின் நிலைமைகள் பற்றியும்; குறிப்பாக அரசியல் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்படுமெனக் கூட்டணி வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது. (மா)

## துன்னாலை பெண் கொலை:

# சந்தேகநபரை பொதுமக்கள் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்

(புலோலி)

வல்லிபுரக்கோவிலுக்கு அண்மையிலுள்ள மணற்காட்டில் மீன்வாங்க கடற்கரைக்குச் சென்ற பெண் குத்திக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேகநபர் ஒருவரைப் பொதுமக்கள் பிடித்துப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடற்கரையில் மீன்வாங்கிச் சென்று விற்பனைசெய்து வாழ்க்கை நடாத்திவரும் துன்னாலையைச் சேர்ந்த தவபாலசிங்கம் செல்லக்கிளி, ஆழ்வான் சரஸ்வதி ஆகிய இருவரும் கடந்த 10-ம் திகதி மீன்வாங்கக் கடற்கரைக்குச் சென்றுகொண்டிருந்தபோது வல்லிபுரக்கோவிலுக்கு அண்மையிலுள்ள மணற்காட்டில் வைத்து பலத்த காயங்களுக்குள்ளாகி ஒருவர் (செல்லக்கிளி) கொலைசெய்யப்பட்டார். மற்றவர் (சரஸ்வதி) பலத்த காயங்களுடன் குற்றுயிரில் கிடந்தார். குற்றுயிரில் கிடந்தவர் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சையளிக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டார்.

இப்பயங்கரச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். திருச்சிற்றம்பலம் நீதிமன்றப்பொலிஸ் உத்தியோகத்தர் எம். சுப்பிரமணியம் ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி, கொலை செய்யப்பட்டவருக்குச் சற்றுத் தூரத்தில் இரத்தந் தோய்ந்த சூலமொன்றைக் கைப்பற்றியதுடன் இக்கொலைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களைத் தேடிவந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குடத்தனை மணற்காட்டில் வைத்து கோபாலு வீணுகோபால் என்ற இளைஞரைப் பொதுமக்கள் பருத்தித்துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர். பொலிசார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இளைஞருக்கு ரிமாண்ட்

(புலோலி)

கடற்கரைக்கு மீன்வாங்கச் சென்ற துன்னாலைப் பெண் கொலைச் சம்பவம் தொடர்பான சந்தேக நபரான இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டார்.

கடற்கரைக்கு மீன்வாங்கச் சென்ற துன்னாலையைச் சேர்ந்த த. செல்லக்கிளி கொலை, சரஸ்வதி கொலைமுயற்சிச் சம்பவங்கள் தொடர்பாகப் பொதுமக்களினால் பிடிக்கப்பட்டு பருத்தித்துறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட கோபால் வீணுகோபால் என்பவர் பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பொலிசார் சந்தேகநபர் நீதிமன்றத்திற்கு வாக்குமூலமொன்றைக் கொடுக்க விரும்புவதாகவும் சந்தேக நபரை அடையாள அணிவகுப்புக்குட்படுத்தவேண்டுமெனவும் தெரிவித்தனர். நீதவான் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## பாடசாலை அதிபர்களுக்கு சைக்கிள்

(பசிலைப்பள்ளி)

பரந்தன் கல்வி வட்டாரத்தில் போக்குவரத்துக் கஷ்டம் நிறைந்த பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கு "யுனிசெப்" நிறுவனத்தின் உதவியுடன் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

சைக்கிள்களை பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. தம்பிராசா பளை மகாவித்தியாலயத்தில் வைத்து வழங்கினார்.

மாசார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை - தட்டுவன்கொட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கலவெட்டித்திடல் நாகேஸ்வரா பாடசாலை, கிளாலி றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள் சைக்கிள்களைப் பெற்றுக்கொண்டார்கள். (இ)

## நாட்டார் பாடல் கருத்தரங்கு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைத் தொகுதி கல்வி நிலையத்தின் ஆதரவில் 9ம், 10ம் தர ஆசிரியர்களுக்கான தமிழ்மொழி நாட்டார் பாடல் குறித்த கருத்தரங்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இரு தினங்கள் நடைபெற்றது. கருத்தரங்கில் திரு. சி. மௌனகுரு, கவிஞர் இ. முருகையன், திருமதி வ. இராமலிங்கம், திருமதி சித்திரலேகா மௌனகுரு, கலாநிதி அ. சண்முகதாஸ் உட்படப் பலரது கருத்துரைகள் இடம்பெற்றன.

தமிழ்மொழி ஆசிரியர்களுக்கான பயனுள்ள கருத்தரங்காக இது அமைந்ததென்று தெரிவிக்கப்பட்டது. கல்வி நிலையப் பொறுப்பாசிரியர் திரு. மு. சிவராசா இதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

## நியமனம்

[சுழிபுரம்]

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையின் சுழிபுரம் கிராம அபிவிருத்தி உப அலுவலக மேற்பார்வை உத்தியோகத்தராக உள்ளூராட்சி உதவி விசாரணை உத்தியோகத்தர் திரு. ஞானபாஸ்கரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

CENTRIC


சென்ட்றிக் தொழில்துறைப் பம்ப்

★ சகல தொழில் துறைத் தேவைகளுக்கும் ஏற்ற 4'' வரை விட்டமுள்ள முழு பம்ப் வரிசை

★ கடின பாவனைக்கேற்ற, தரமுயர்ந்த, முற்றிலும் மூடிக்குளிர்ச்சி விசிறி பொருத்திய மோட்டார்கள்

★ பித்தளையிற் செய்த நீர்ச் செலுத்தி இணைத்த, முற்றிலும் வார்ப்பிரும்பிலான கட்டமைப்பு

★ சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.



விலை ரூ. 3,650/- முதல்.
கையிருப்பிலிருந்து கிடைக்கும்.

ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி, கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

Mel Ads

# தமிழர் உயிர்உடைமைகளின் பாதுகாப்புக்கு ஜனாதிபதி உறுதி

## கூட்டணித் தலைவர்கள் நிலைமைகளை எடுத்துக்கூறினர்

(கொழும்பு)

"யாழ்ப்பாணத்திலும் நாட்டின் ஏனைய இடங்களிலும் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரமும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைச் சந்தித்து எடுத்துரைத்தனர்.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதி இலங்கை முழுவதிலும் வாழும் தமிழ் மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் சட்டவிரோத சக்திகளிடமிருந்து பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று உறுதியளித்தார்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட நாடெங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்ததுடன் நிரபராதிகளான மக்களின் உயிருக்கோ சொத்துக்கோ எவ்வித தீமையும் விளைவிக்கக் கூடாதென்று இராணுவத்தினருக்கு கட்டளை பிறப்பித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதிக்கும் தமக்குமிடையே நடந்த இச்சந்திப்பு சம்பந்தமாக திரு. அமிர்தலிங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் இடம்பெற்ற வன்செயல்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'நிரபராதியான தமிழ்மக்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கையாக சில இராணுவ வீரர்கள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளையும் கண்டிக்க வேண்டும்.

'யாழ்ப்பாணத்தில் மூன்று இராணுவ வீரர்கள் காலமானதற்கு காரணமாகவிருந்த இரண்டு வன்முறைச் சம்பவங்களையும் சமாதானத்தை விரும்பும் எவரும் வன்மையாகக் கண்டிக்க தவறமுடியாது. இக்கொலைகளுக்கு எதுவித காரணமும் இல்லை.

'ஐரிஷ்பயங்கரவாதிகள் ஆங்கிலப் படைவீரர்களைக் கொன்றால் அதற்கு பழிவாங்கும் பொருட்டு பிரிட்டிஷ் இராணுவம் அப்பாவி ஐரிஷ் மக்களை தாக்குவதில்லை.

"ஜனாதிபதியும் இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் வீரதுங்காவும் நிரபராதிகளான மக்களின் உயிருக்கோ, உடைமைக்கோ எதுவிததீமையும் விளைவிக்கக்கூடாது என்று கண்டிப்பான கட்டளை பிறப்பித்துள்ளதாக உறுதியளித்தனர்.

"நானும், திரு. சிவசிதம்பரம் எம்.பி.யும் ஜனாதிபதியைச் சந்தித்து யாழ்ப்பாணத்திலும், ஏனைய பகுதிகளிலும் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை அவரது கவனத்துக்கு கொண்டுவந்தோம்.

"இலங்கைமுழுவதிலும் தமிழ் மக்களின் உயிர்களையும், சொத்துக்களையும் சட்டவிரோதசக்திகளிடமிருந்து பாதுகாக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

'தமது கடமைகளைச் செய்யும் உத்தியோகஸ்தர்கள் மீது நடத்தப்படும் வன்முறை தாக்குதல்களை தமிழர் விடுதலைக் கூட்டணியோ, தமிழ் மக்களோ எதுவிதத்திலும் அங்கீகரிக்கவில்லை என்பதை ஜனாதிபதியிடம் உறுதியாகக் கூறினோம்;

"மக்களும் படைவீரர்களும் ஒருவர் நிலைமையை ஒருவர் புரிந்து கொண்டு சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்" என்றும் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். (வெ)

## காலமானார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முன்னாள் மாநகரசபை உறுப்பினர் திரு. வி. பி. அரசன் நேற்று முன்தினம் காலமானார். (இ)

## ஒருலட்சம் ரூபாய் பெறுமதியான போதைவஸ்துகடத்தினுராம் ரூ. 25 ஆயிரம் பிணை!

(மன்னார்)

ஒரு லட்சம் ரூபா பெறுமதியுடைய போதைவஸ்து கடத்தியவர் 25ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியாவிலிருந்து தலைமன்னார் வந்த கொழும்பு வாசி ஒருவரே போதை வஸ்து கடத்திய சந்தேக நபராவார்.

இவர் கொண்டுவந்த பொதிகள் மீது சந்தேகம் கொண்ட தலைமன்னார் சுங்க அதிகாரிகள் பொதிகளை சோதனையிட்டபோது சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியுடையபோதை வஸ்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து சந்தேக நபர் மன்னார் நீதவான் திரு. மடவெல முன் ஆஜர் செய்யப்பட்ட போது சந்தேக நபரை 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

## மகாராணியார் விஜயம்
## பொலிசாரின் சேவைக்கு ஐ. ஜி. பி. பாராட்டு

(கொழும்பு)

மகாராணியாரின் விஜயத்தின் போது கடமையாற்றிய சகல பொலிசாரையும், பொலிஸ்மா அதிபர் திரு. அனு செனிவரத்ன வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

விஜயத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை பத்தாயிரம் பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும், போக்குவரத்துநடவடிக்கைகளுக்குமென விசேடமாக அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் மீண்டும் தமது வழமையான கடமைகளுக்குத் திரும்பியுள்ளனர்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கமே மேற்படி பாதுகாப்பு ஒழுங்குகளுக்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவரே யாவற்றையும் நேரடியாகக்கவனித்துச் செயற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (இ)

## நாளை உலக உணவு தின கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். விவசாய உற்பத்தியாளர் சங்கத்தால் உலக உணவு தினத்தையொட்டி கருத்தரங்கொன்று நாளை வெள்ளிக்கிழமை காலை திருநெல்வேலி விவசாயப்பாடசாலையில் யாழ். அரசாங்க அதிபரும் மாவட்ட அபிவிருத்திசபைச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெறவுள்ளது-

இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக உணவு விவசாய ஸ்தாபனத்தின் இலங்கை பிரதிநிதி திரு. ஜி.லோறன்ட் கலந்துகொள்கிறார்.

இக்கருத்தரங்கில் உணவு விவசாய.ஸ்தாபனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் டாக்டர் சி. பிரசாத். விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. திரு. எஸ். நடேசன், வடபிராந்திய விவசாய ஆராய்ச்சி உதவிப் பணிப்பாளர் திரு. ஜே. ஏ. லூயிஸ், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் டி. ராமதாஸ், யாழ்,மாவட்ட விவசாய உதவிப்பணிப்பாளர் திரு. சிவா முத்துலிங்கம், டாக்டர் ஏ. பவாப்பா, உலக உணவுஸ்தாபனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் டாக்டர் எஸ்.. ஜேக்கப் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் கலந்துரையாடலும் உலகஉணவு உற்பத்தி பற்றிய படக்காட்சியும். விவசாய மனையியல் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது. (வெ)

## மன்னார் மாவட்டத்தில் பரவலாக தாக்குதல் சம்பவங்கள்!
### ஜனாதிபதிக்கு மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் அவசரத்தந்தி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவலாக இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்களை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு பி. எம். சொமாலை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா, இராணுவத் தளபதி ஆகியோர் உட்பட மற்றும் பல உயர் அதிகாரிகளுக்கு தந்திமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் மேலும்கூறப்பட்டுள்ளதாவது:

மன்னார் மாவட்டத்தில் பொதுமக்கள் பரவலாக இராணுவத்தினராலும், சிவில் உடையில் காணப்படுபவர்களாலும் தாக்கப்பட்டு வருகின்றனர். இதனால் மன்னார் மாவட்ட மக்கள் பீதியடைந்திருப்பதுடன், தமது அன்றாட வேலைகளைக் கவனிக்க வெளியில் செல்ல அஞ்சுகின்றனர்.

ஆதலால், தற்போது இடம்பெறும் தாக்குதல் சம்பவங்களை உடன் நிறுத்துவதோடு, மக்களிடையே ஏற்பட்டுள்ளபீதியை நீக்கி அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கவும் என கேட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கொள்ளைதொடர்பாக மன்னார் மாவட்டத்திலும் பலத்த தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

## வட்டக்கச்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக வடபகுதி நீர்வளச்சபை பொறியியலாளர் திரு த. குணசேகரம் தெரிவிக்கிறார்.

இவ்வேலைகளைப் பார்வையிடுவதற்காக அமைச்சரின்பணிப்பின் பேரில் நீர்வளச்சபைத் தலைவர் திரு. காமினி கன்னங்கரா இன்று காலை விஜயம் ஒன்றை வடபகுதிக்கு மேற்கொள்கிறார்.

இவர் யாழ்அரசாங்கஅதிபர் திரு. தேவநேசன் நேசையா நடாத்தும் நீர்வளம் சம்பந்தமான மகாநாட்டிலும் கலந்து கொள்ளவுள்ளார். (மா)

## கந்தசஷ்டி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் வழமை போல் இம்முறையும் கந்தசஷ்டி விழா நடைபெறுகிறது.

தினமும் மாலை பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா "கந்தன் கருணை" பற்றி இன்னிசை விரிவுரை நிகழ்த்தி வருகிறார்.

## முன்னாள் எம்.பி. தம்பிராஜா காலமானார்

(மட்டக்களப்பு)

முன்னாள் பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். யூ. தம்பிராசா நேற்றுமுன்தினம் தமது 62வது வயதில் மாரடைப்பால் காலமானார்.

நேற்று முன்தினம் இரவு கல்முனை - நற்பிட்டிமுனையில் உள்ள இல்லத்தில் காலமான அன்னாரது பூதவுடல் இன்று வியாழக்கிழமை கல்முனையில் தகனம் செய்யப்படும்.

8 பிள்ளைகளுக்குத் தந்தையான அவர் முன்னாள் கடற்றொழில் உதவி அமைச்சரும் பட்டிருப்பு எம். பியுமான அமரர் எதிர்மன்னசிங்கத்தின் தம்பியாராவார்

கூட்டுறவுத் திணைக்களத்தில் உயர்பதவி வகித்த திரு. தம்பிராசா, 70ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் பட்டிருப்புத்தொகுதியில் ஐ. தே. கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு தமிழரசுக்கட்சித் தலைவர் அமரர் திரு. எம். எம். இராசமாணிக்கத்தை தோற்கடித்து 72ம் ஆண்டு தேர்தல் ஆட்சேபனை வழக்கின்மூலம் தமது பதவி இழந்து, பின் இத்தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்து மீண்டும் எம். பியானார்.

77ம் ஆண்டு தேர்தலில் சுதந்திரக்கட்சியில் சேர்ந்து அதே தொகுதியில் போட்டியிட்டு தோல்வி கண்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா உட்பட பல சுதந்திரக் கட்சித் தலைவர்கள் பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## வனவிலங்குகளை வேட்டையாடத் தடை!

இஸ்லாமாபாத், அக். 28

பாகிஸ்தானில் வனவிலங்குகள் அருகிவருவதையடுத்து மூன்று வருடங்களுக்கு அவற்றைவேட்டையாட அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

காட்டுப்பன்றியை முஸ்லிம்கள் உணவுக்கு பயன்படுத்தாததால் அதனை வேட்டையாடுவதற்கு மட்டும் தடைவிதிக்கப்படவில்லை. (வெ)


# 27%

இலங்கையில் இரண்டாவதாக ஆரம்பமான
பினன்ஸ் கம்பனி. ஸ்தாபிதம்: மே 1940-ம் ஆண்டு

இயக்குநர்கள்

திரு. ஜே. எல். பி. கொத்தலாவெல, ஏ.எம்.எக்ஸ, லண்டன் (தலைவர், நிர்வாக இயக்குநர்)
திரு. பீ. டி. விசுவாசம் எவ். சி. ஏ. (நிதி இயக்குநர்)
சட்டத்தரணி திருமதி பி. கே. கருணநாயக்கா (பொது முகாமையாளர்)
திருமதி என். மடவெல (காரியதரிசி)
திரு. டி. ஆர். சேனநாயக்கா ஏ. எம். எக்ஸ். ஏ. லண்டன்
சட்டத்தரணி திரு. கே. என். சோக்சி

வியாபார நோக்கம்

முதலீட்டு வைப்பு, காணி கொள்வனவு, விற்பனவு, கைத்தொழில், இரத்தினக்கற்கள், சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு நிதி அளித்தல்

தொழிலாளர்களுக்கு பங்குகள்வழங்கிய இலங்கையின் முதலாவது பினன்ஸ் கம்பனி இதுதான்

| வருடம் | வழங்கப் பட்ட பங்கேட்டு முதல் | வருமான சேமிப்பு | முதலீட்டு சேமிப்பு | மற்றைய பற்று விபரம் | வரிவிதிப்புக்கு முன்னர் உள்ள முதலீட்டுவைப்பு | வரி விதிப்புக்கு பின்னர் உள்ள நிகர லாபம் | பங்கு லாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | 1,200,000 | 1,038,278 | 2,195,700 | 771,277 | 92,070 | 82,070 | 5 |
| 1974 | 1,200,000 | 1,065,951 | 6,045,843 | 2,681,195 | 264,328 | 147,326 | 10 |
| 1975/76 | 1,200,000 | 1,315,706 | 15,400,048 | 9,106,588 | 361,480 | 361,480 | 7·5 |
| 1976/77 | 1,200,000 | 664,721 | 31,894,498 | 4,276,988 | 395,762 | 395,762 | 10 |
| 1977/78 | 1,200,000 | 1,698,335 | 41,203,537 | 3,974,728 | 167,532 | 167,582 | 10 |
| 1978/79 | 1,210,150 | 1,727,524 | 57,284,462 | 1,866,699 | 145,561 | 115,561 | 10 |

வட்டி வீதம்

தவணை வைப்புக்கணக்கு

| முதலீடு செய்யவேண்டிய தொகை | முதலீட்டுக் கால எல்லை | செலுத்தப்படும் வட்டி வீதம் | செலுத்தப்படும் வட்டி வீதம் |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 12 மாதங்கள் | 20 % வருடம் | மாதம்/காலாண்டு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 22 % வருடம் | அரைவருடம்/ |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 24 % வருடம் | வருடந்தோறும் |

புதிய அதிவிரைவான பயனளிக்கும் வைப்புக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 18 மாதங்கள் | 22 % வருடம் | உங்கள் முதலீடு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 25 % வருடம் | முதிர்ச்சிஅடைந்ததும் |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 27 % வருடம் | முதலீடும் வட்டியும் செலுத்தப்படும் |

முதலீட்டுச் சேமிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆகக் குறைந்த முதலீடு ரூபா. 50/- | 24 மாதங்கள் | 15 % வருடம் |

✣ இந்த இலாபக்கணக்குகள் வழியவர்களுக்கு இலாப ஊக்குவிப்புப்பணம் வழங்கியபின் உள்ள தொகையாகும்.

31-3-81வரை ரூபா 10கோடிக்குமேல் நிலையான வைப்புத்தொகை

**த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,**

மூன்றும் மாடி, சிலிங்கோ மாளிகை, கொழும்பு-1
கிளை: 249/C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7680
மற்றும் 13 கிளைகள் நாடு பூராவும்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சினன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 29-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper. The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 388, 8126.